## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No - 86/2024

Date: 17.07.2025 PW. 1 (சித்ரா )

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

தாவா சொத்து என் தாத்தா முனியாண்டியின் அப்பா சங்கிலி என்பவரது சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்து என் தாத்தா முனியாண்டியின் அப்பா சங்கிலி என்பவரது என்பதை காட்டுவதற்கு பட்டா, சிட்டா அல்லது மற்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து என் தாத்தா முனியாண்டியின் சொத்து என்று காட்டுவதற்கு எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்தவித ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு என் தந்தை காசி மற்றும் எனது சின்ன தாத்தா சண்முகம் ஆகியோர் பெயர்களில் கூட்டு பட்டா இருந்தது என்றால் சரிதான். மேற்படி கூட்டுபட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் சகோதரி 1-வது வாதி உமா என்பவருக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 2005ம் ஆண்டு திருமணம் ஆனது. மேற்படி என் சகோதரி 1-வது வாதி உமா திருமணம் ஆனதிலிருந்து பூனாவில் தான் இருக்கிறார் என்றால் சரிதான். தற்சமயம் எங்கு இருக்கிறார் என்றால் கடந்த 7 ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவில் இருக்கிறார். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 2001ம் ஆண்டு திருமணம் ஆனது. நான் திருமணம் ஆனதிலிருந்து எங்கு இருக்கிறேன் என்றால் சென்னையில் இருக்கிறேன். எனக்கும் எனது சகோதரிக்கும் திருமணத்திற்கு நகை, சீர் செய்தார்களா என்றால் இல்லை. நான் சொல்வது போல் என் தந்தை திருமணத்திற்கு நகை சீர் செய்தார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருக்கும்போது எங்களுடன் சண்டை போட்டாரா என்றால் இல்லை நல்லபடியாக பேசிக்கொள்வோம். 1 முதல் 3 பிரதிவாதிகளிடமும் நன்றாக பேசிக்கொள்வோம் என்றால் சரிதான். கூட்டுபட்டாவில் எவ்வளவு சொத்து இருந்தது என்றால் 1 ஏக்கர் 20 செண்ட் இருந்தது. மேற்படி கூட்டுபட்டாவில் இருந்த சொத்தை எவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்றால் பாதி பாதியாக பிரித்துக் கொண்டார்கள். மேற்படி அவ்வாறு பிரித்துக் கொண்ட சொத்துக்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. தாவா சொத்தை வழக்கு போடுவதற்கு முன்பு அளந்து பார்த்தோமா என்றால் இல்லை.

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2025.07.17 16:45:23 +0530

தாவா சொத்தின் அளவு என்ன என்றால் 60 செண்ட் ஆகும். 4, 5 பிரதிவாதிகளுக்கு என் தந்தை தாவா சொத்தை எப்போது கிரையம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது குடும்பத்தின் தாவா சொத்து தவிர வேறு பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எனது தந்தைக்கு கொல்லங்குடியிலும் சொத்து உள்ளது என்றும் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. சங்கிலியின் சொத்து தற்போது யாரிடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சங்கிலி என்பவர் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை வேறு நபருக்கு விற்று விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சங்கிலி என்பவர் அவருடைய சொத்தை விற்கும் போது கூடுதலாக அவருக்கு பாத்தியப்பட்ட 60 செண்ட்டுக்கு கூடுதலாக 73 செண்டை விற்றுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது தாவா சொத்து 60 செண்டுக்கு பதிலாக 47 செண்ட் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கான பட்டா 4, 5 பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் நானும் என் சகோதரியும் வெளியூரிலும், வெளிநாட்டிலும் உள்ளோம் என்றும் அதனால் எனக்கு தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் 2009ம் வருடத்திலேயே என் தந்தையிடமும் 2 சகோதரரர்களிடமும் தாவா சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 2 சகோதரரர்களையும் 2, 3 பிரதிவாதிகளாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் ஆஜராகி மேற்படி விவரங்கள் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 சகோதரர்களும் என் அப்பாவும் சேர்ந்து தாவா சொத்தை 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்ததால் தான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியான என் அம்மா மற்றும் 2, 3 பிரதிவாதிகளான என் சகோதரர்கள் ஆஜராகி இந்த வழக்கை நடத்தவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்து என்று நிரூபிக்க நான் எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்து இல்லை என்றும் அது என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் 4, 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்தது

செல்லும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணம் செய்து கொடுத்த பின்பு எந்த காலத்திலும் தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து நாங்கள் கூட்டு அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்து 4, 5 பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய 2009ம் வருடமே அவர்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்து சென்றுவிட்டது என்றால் சரியல்ல. பின் யோசனையின் பேரில் 4, 5 பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.17 16:45:30 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**